# உடல் நன்கொடை உறுதிமொழி படிவம்

பெயர் :

தகப்பனார் / கணவர் பெயர் :

வயது :

பால் :

விலாசம் :

பிள்ளைகள் விவரம்

ஆண் :

பெண் :

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் வசிக்கும் நான்... ..........................

வயது ............ தகப்பனார் / கணவர் பெயர் ......................................
நான் என் முழு சுய நினைவோடும் தகுந்த மன உடல் இல்லாமல் தீவிர ஆலோசனைக்குப் பின் நானாக எடுத்த முடிவின் படி என் இறப்பிற்கு பின் என் உடலை தானமாக கொடுக்க முடிவு செய்து திருவள்ளூர் அரசு மருத்துவக்கல்லூரி உடற்கூற்றியல் துறைக்கு கொடுக்க முழு சம்மதமளித்து உறுதி கூறுகிறேன்.

என் இறப்பினை என் வாரிசுதாரர்கள் திருவள்ளூர் மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு உடனே தெரிவித்து ஒரு நாளைக்குள் என் உடலை கொண்டு வந்து முதல்வர்/நிலைய மருத்துவ அலுவலர் ஒப்படைப்பார்கள் என்றும் உறுதியளிக்கிறேன்.மேலும் என் உடலொடு தகுந்த தகுதி வாய்ந்த மருத்துவரிடம் பெற்ற இறப்பு சான்றிதழை (இறந்ததேதி, நேரம், இறப்பின் காரணம் குறிக்கப்பட்ட) தந்து உடலை ஒப்படைப்பார்கள் என்று உறுதிக்கூறுகிறேன்.

கையொப்பம்

தேதி :

நாள் :

மேற்குறிப்பிட்டுள்ள திரு/திருமதி…………………………………......அவர்களின் வாரிசுதாரர்களாக கீழ் கையொப்பமிட்டுள்ள நாங்கள் முழு சம்மதத்தோடு அவரின் கூற்றை ஏற்று அவர் விருப்பப்படி அவரின் உடலை அரசு மருத்துவக் கல்லூரி திருவள்ளூர் உடற்கூற்றியல் துறைக்கு தானமாக வழங்கவும் அதற்குண்டான பொறுப்புகளையும் மற்றும் அனைத்து செலவினங்களையும் ஏற்று நானே செவ்வனே செய்து முடிப்போம் என்றும் உறுதியளிக்கிறோம்.

வாரிசுதாரர்க்ள கையொப்பம்:

1.

2.

3.

சாட்சி கையொப்பம்:

1.

2.

## உடல் தானம் செய்பவர்கள் கவனத்திற்க்கு

தாங்கள் தங்களின் இறப்பிற்க்கு, பின் தங்களின் உடலை தானமாக அரசு மருத்துவக் கல்லூரி திருவள்ளூர் மாணவர்களின் படிப்பிற்காக கொடுக்க முன்வந்துள்ள பெரும் நற்செய்கைக்கும் முதலில் பாராட்டுதலை தெரிவித்து கொண்டு தங்கள் பெயர் எங்களிடம் பதிவு செய்யபட்டிருந்தாலும் சில விவரங்களை படிவங்களில் தாங்கள் பூர்த்தி செய்து சமர்பிக்க வேண்டியிருப்பதால் தங்களின் கவனத்தை தற்போது ஈர்க்க கடமைப்பட்டிருக்கின்றோம்.

## தாங்கள் செய்யவேண்டுவது யாதெனின்

1. முதலில் ஒரு பத்து ரூபாய் பதிவுத்தாளில், தாங்கள் முழுமனதோடும், யாருடைய கட்டாயத்தின் பேரிலுமில்லாமல், விருப்பத்தோடு, ஒரு உயில் போல தங்களின் இறப்பிற்குப்பின் தங்களின் முழு உடலை திருவள்ளூர் மருத்துவக் கல்லூரிக்கு (மருத்துவ மாணவர்களின் படிப்பிற்காகக) தானமாக தருவதாக ஒரு உறுதி மொழிப்படிவம் எழுத வேண்டும்.

2. அதில் தங்களின் கணவர்.்.துணைவியார் மற்றும் வாரிசுதாரர்கள் அனைவரின் பெயரும் குறிக்கப் பெற்று அவர்கள் அனைவரிடமும் முழு உடல்தானத்திற்காக சம்மதத்திற்கான ஒப்புதல் கையொப்பமும் பெற்று சமர்பிக்க வேண்டும்.

3. பத்திரத்தில் தங்களின் புகைப்படம் ஒன்றும், சான்றிதழ்க்காக ஒரு புகைப்படம் ஒன்றும் ஒட்டப்பட வேண்டும்.

4. இரண்டு சாட்சிகளின் கையொப்பம் பதியப்பெற வேண்டும்.

5. வாரிசுதாரரோ அல்லது உறவினரோ தங்களின் இறப்பினை கல்லூரி முதல்வருக்கும் உடற்கூற்றியல் துறை தலைவருக்கும் தெரிவிக்க ஒப்புதலளித்தது போல் தெரிவிக்க வேண்டும்.

6. இறப்பிற்கான மருத்துவச் சான்றிதழும், அதில் இறப்பிற்கான காரணம் குறிக்கப் பெற்று தகுதியான மருத்துவரிடம் வாங்கி சமர்ப்பிக்க வேண்டும் மருத்துவச் சான்றிதழ் இன்றி உடல் பெற்றுக்கொள்ளப்படமாட்டது.

7. மரணம் இயற்கையானதாக இருக்க வேண்டும் தற்கொலை மற்றும் மெடிக்கோலீகல் பிரச்சனை போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்ட உடல்கள் மஞ்சள் காமாலை எய்ட்ஸ் மற்றும் தீவர தொற்று நோய்களால் தாக்குதல் உண்டானவர்களின் உடல்கள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8. இறப்பு ஏற்ப்பட்ட ஒரு நாளைக்குள் உடலை ஒப்படைப்பது நல்லது.

9. உடலை தங்கள் இருப்பிடத்தில் இருந்து கல்லூரி முதல்வரிடம் கொண்டு வந்து கல்லூரியில் ஒப்படைக்கும் பொறுப்பு தங்களுடைய குடும்பத்தாருடையது.

10. விடுமுறை நாட்களில் மருத்துவமனையில் உடலை ஒப்படைக்கலாம்.

11. கண்தானம் செய்திருப்பவர்கள் இறப்பு ஏற்பட்ட ஓரிரு மணிக்குள் கண் வங்கிக்கு தகவல் கொடுத்தால் அவர்கள் வீட்டிற்கே வந்து எடுத்த செல்வார்கள். (அதற்கான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்) பின்னர் உடலை சடங்குகள் முடித்து பின்னா் கல்லூரி முதல்வர் வசம் ஒப்படைக்கலாம்.

12. உடலை ஒப்படைத்த பின்னா் திரும்ப பெற இயலாது.

முதல்வர்
அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை
திருவள்ளுர்